கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/ முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு பகுதி – I
2009/2010 (ஜனவரி/ பெப்பிரவரி 2013)

TL 2101 நன்னூலின் அடிப்படையில் தமிழ் இலக்கணம்

LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY, SRI

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் பகுதியில் முதலாம், இரண்டாம் வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியில் இரண்டு வினாக்களுக்குமாக நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக

## பகுதி – I

1. பின்வருவனவற்றுள் நான்கு சூத்திரங்களுக்குப் பொருள் விளக்கம் தருக.

(அ) மொழிமுதற் காரணமாம் அணுத் திரளொலி
எழுத்தது முதல் சார்பென விருவகைத்தே

(ஆ) அம்முதல் ஈராறு ஆவி கம்முதல்
மெய்ம் மூவாறென விளம்பினர் புலவர்

(இ) ஆவியிடைமை இடமிடறாகும்
மேவு மென்மை மூக்குரம் பெறும் வன்மை

(ஈ) மெய்கள் அகரமும் நெட்டுயிர் காரமும்
ஐ ஔகானு மிருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும்பிற

(உ) பகுதி விகுதி யிடைநிலை சாரியை
சந்தி விகார மாறினும் மேற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்

(ஊ) உயிர் வரினுக்குறள் மெய்விட்டோடும்
யவ்வரி னிய்யா முற்று மற்றோரோவழி

(4 X 5 = 20 புள்ளிகள்)

2. ஆறு வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

(அ) எழுத்திலக்கணத்தின் பகுதிகள் என நன்னூலார் குறிப்பிடுபவை யாவை?

(ஆ) சார்பெழுத்துக்களை எடுத்துக் கூறுக?

(இ) பெயர்களின் வகைகளைக் கூறி விளக்குக?

(ஈ) வினாவெழுத்துக்கள் யாவை? அவை வருமாற்றை உதாரணங்களுடன் விளக்குக.

(உ) எழுத்தின் பிறப்பு பற்றி யாது கூறுவீர்?

(ஊ) அளபெடை என்றால் என்ன? விளக்குக

(எ) குறுக்கங்கள் எவ்வாறு தோன்றும்?

(ஏ) ஈற்றுநிலை எழுத்துக்கள் யாவை?

## பகுதி – II

3. மெய்ம்மயக்கம் என்பது யாது? அதன் வகைகளை விரிவாக விளக்குக.

4. வேற்றுமையின் வகைகளை எடுத்துக்கூறி இன்றைய நிலையில் அதன் பகுப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை விளக்குக.

5. "நன்னூலில் கூறப்படும் மொழிச்செம்மை தற்போது பேணப்படுவதில்லை" விளம்பரங்களிலும் அறிவித்தல்களிலும் பொதுவாகக் காணப்படும் எழுத்துப் பிழைகளை எடுத்துக்காட்டி அதற்கான காரணிகளை ஆராய்க.

6. பின்வருவனவற்றுள் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

   (அ) இயல்புப் புணர்ச்சி - விகாரப் புணர்ச்சி

   (ஆ) பால் விகுதிகள்

   (இ) மூவிடப் பெயர்கள்

   (ஈ) ஆகுபெயர்